நவநீதகவி செய்த

அரிஷ்ட நவநீதம்

தமிழ் மொழிபெயர்ப்பு

Sothida Vilasa Book Depot
Kokuvil, (Ceylon.)

1940 விலை அணா 4.

உ

ஓம் குமார குருப்பியோநம:

நவநீதகவி செய்த

அரிஷ்ட நவநீதம்

தமிழ் மொழிபெயர்ப்பு

பதிப்பாசிரியர்

பறங்கிப்பேட்டை

சு. ஏ. கு. ஏகாம்பரம் அவர்கள்.

பிரசுரித்தவர்

R. S. இரகுநாதையர்

சோதிடபரிபாலினி ஆசிரியர்

கோக்குவில், யாழ்ப்பாணம்.

கோக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

Copy Right]

1940.

[விலை அணா 4.

முன்னுரை

காப்பு

முத்தொடுபொன் சேர்ந்திடவும் முன்னுயுள் சீர்பெறவும்
முத்துக் குமாரனை நீ முன்.

உலகத்தின்கண் மாந்தர் யாவரும் இம்மையினும் அம்மையினும் இன்பசித்திகளையும் பேரின்பநலத்தையும் பெற்று உய்ய வேண்டும் என்னும் பெருநோக்கம் உடையராய் விளங்குகின்றார்கள். இந்நோக்கத்தை யடைதற்கு எல்லாம் வல்ல இறைவன் இயன்ற யாக்கையையும், அதன் வாழ்நாளையும், அச் சரீரத்தைக்கொண்டு அடையவேண்டிய பொருள் இன்பங்களையும் அருளிச்செய்திருக்கின்றார்.

"அர்த்தரேகையைப் பெற்றிருந்தும் என்?
ஆயுள்ரேகையைப் பொருந்தப்பெற்றிராவிடின்" என்பது ஓர் முதுமொழி. இப் பழமொழிப்படி எவரும் தம் வாழ்நாளின் பெருக்கத்தை அறிந்துகொள்ளவும், அவ்வாழ்நாளில் யாதேனும் குறைவு நேரிடின் அதனைப் பரிகரித்துக்கொள்ளவும் வேண்டும். ஒருவர் மேற்கூறிய விஷயத்தை அறிந்துகொள்ளுவதற்கு ஏதுவாகச் சோதிடசாஸ்திரமாகிய திருப்பாற்கடலைத் தமது மதிநுட்பமாகிய மத்தைக்கொண்டு கடைந்து, தேவர்களுக்குத் திருமால் அமுதத்தை யளித்தது போல நம்மவர்க்கு நவநீதகவி என்னும் மகாபுருஷர் "அரிஷ்ட நவநீதம்" என்னும் இந்நூலை வடமொழியில் எழுதி உபகரித்துள்ளார். இந்நூலின் தாளபத்திரகோசம் ஒன்று என்னுடைய கிருகத்தில் இருந்ததனை நான் வெகுபிரியத்தோடு வாசித்துப் பார்த்து, இது தமிழுணர்ந்த பெரியோர் யாவர்க்கும் உபயோகமாகும் பொருட்டு முன்னோர்களால் இதற்கு எழுதப்பட்டிருந்த தமிழுரையை மாத்திரம் வெளியிடல்வேண்டும் என்னும் நோக்கங்கொண்டு இருந்தபோது, என்னுடைய ஆப்தநண்பர் ஸ்ரீமத் E. R. சுவாமிநாததேசிகர் என் நோக்கத்தைக் கேள்வியுற்றுத் தம்மிடமிருந்த உரையோடு கூடிய இந்நூற் பிரதியொன்றைத் தந்து உபகரித்தார்கள். அதனோடும் என் பிரதியை ஒப்பு நோக்கி, யாழ்ப்பாணம் கொக்குவில் சோதிடபரிபாலனமடம்

பிரமஸ்ரீ R. S. இரகுநாதையர் அவர்களுக்கு அனுப்பிச் சோதிடபரிபாலினியில் வெளியிடும்படி கேட்டுக்கொண்டேன். அவ்வண்ணமே அவர்கள் அப் பத்திரிகையில் வெளியிட்டு வந்ததுமன்றி அதனையே புத்தகரூபமாகவும் அச்சிட்டு வழங்கத் திருவுளம்பற்றினார்கள்.

இந்நூல் 102 சுலோகங்களால் ஆக்கப்பெற்று, முதற்கண் அரிஷ்டமாவது: சுநிஸ்தம், அநிஸ்தம், யோகஜம் என மூன்று வகைப்படும் என்றும், அவற்றுள் சுநிஸ்தமாவது ஆயுள்; அநிஸ்த மாவது ஆயுளின் இடையே குரூரக் கிரகங்களால் வருவனவாகிய உற்பாதங்களை யறிவிப்பது; யோகஜமாவது ஜனனகாலத்தில் கிரகஸ்திதியால் வருவனவற்றை யறிவிப்பது என்றும், அவை சிசு, மாதா, பிதா, சகோதரன், அம்மான், பிதாவின் சகோதரன், மாதாவின்பிதா, பிதாவின்பிதா என எண்மருக்கும் நேரிடுவதென் றும், அவை இன்னின்ன கிரகங்களால் நேரிடுவனவென்றும் உணர்த்தி, அவற்றைத் தக்க பெரியோர்களால் ஆகமங்களில் விதித்தபடியே பரிகரித்துக்கொள்ளல்வேண்டுமென்றுங் கூறி யுள்ளார். இத்தகைய நூல் நம்மவர் யாவர்க்கும் பயன்படும் வண்ணம் என் வேண்டுகோளின்படி இதனை வெளியிட்ட பிரமஸ்ரீ R. S. இரகுநாதையர் அவர்களுக்கு என் மனப்பூர்வ மான நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நூலை வாசித்து, அதன் சாராம்சங்களை உய்த்துணர்ந்து, தமக்கு நேரிடக்கூடிய அரிஷ்டங்களை நீக்கிக்கொண்டு, மாந்தர் யாவரும் அரோகதிடகாத்திரராய்த் தீர்க்காயுளைப் பெற்றுச் சகல சம்பத்துடன் இம்மையில் வாழ்ந்து, அம்மையினும் பேரின்பச் சித்தியினைப் பெற்று, ஸ்ரீவல்லி தேவஸேனா ஸமேத ஸ்ரீ குமாரக் கடவுள் அநுக்கிரகம் பெற்று இனிது வாழ்வார்களாக. சுபம்.

விக்கிரம ஆண்டு மிதுனரவி
12௨
பறங்கிப்பேட்டை

சு. ஏ. கு. ஏகாம்பரம்.

உ

குகமயம்

ஓம் குமாரகுருப்யோ நம:

அரிஷ்ட நவநீதம்

காப்பு

செவ்வி திகழ்பொகுட்டுச் செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய் குறத்தேனை — நவ்வி
விழியானை யைப்புணரும் வேளைமத வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று.

நூல்

உத்கிருஷ்ட நவநீதகவி யென்பார் ஒருவர் தனது வழிபடுதேவதையான ஸ்ரீரங்கநாதரை நமஸ்கரித்து, அப் புண்ணிய புருஷோத்தமர் பாற்கடல் கடைந்து அமுத மீந்ததுபோல, ஹோராசாஸ்திரமாகிய சமுத்திரத்தைக் கடைந்து, அதன் சாரமாய வெண்ணெய் என்னும் அரிஷ்ட நவநீத கிரந்தத்தை லோகோபகாரார்த்தமா யாக்கியருளின ரென்ப. (1)

அரிஷ்டம் என்பது மரணத்தைச் சூசிப்பிக்கின்றது. இந்த அரிஷ்டம் மூன்று விதமாம் அவை சுநிஸ்தம், அநிஸ்தம், யோகஜம் எனப்படும். சுநிஸ்தமாவது ஆயுள். அநிஸ்தமாவது ஆயுளினிடையே குரூரக்கிரகங்களால் வருவனவாகிய உற்பாதங்களை யறிவிப்பது. யோகஜமாவது ஜனனகாலத்தில் கிரகஸ்திதியால் வருவன வற்றை யறிவிப்பது. (2)

ஜனனகாலத்தில் திரேக்காணம், கிரககதி, நக்ஷத்திரம், நவாம்சம் ஆகிய நான்கு விதங்களினாலே அரிஷ்டமுண்டாகும். இந்த அரிஷ்டம் வரும்பொழுது பிள்ளை, மாதா, பிதா, சகோதரன், அம்மான், பிதாவின்சகோதரன், மாதாவின்பிதா, பிதாவின்பிதா இந்த எட்டுப்பேருக்கும் அரிஷ்டமறிந்து சொல்லவேண்டுமென்றறிக. (3)

பாபியினாலே பார்க்கப்பெறும் லக்கினத்திற் சிசு ஜனித்து, அவ்விலக்கினத்திற்கு 7-8-ம் இடங்களில் பாபக்கிரகங்கள் நிற்பின் பிள்ளையும் தாயும் மரணமடைவர்.

இலக்கினத்துக்கு 12-ல் சூரியனும், 4-ல் செவ்வாயும் க்ஷீணசந்திரனும் இருப்பின் தாயும் சேயும் மரணமுறுவர். (4)

பாபக்கிரகங்களின் மத்தியத்தில் சூரியனாவது சந்திரனாவது இருந்து, சுபனாலே பார்க்கப்படாமல் நிற்கில் பிள்ளையும் தாயும் மரணமடைவர்.

இப்படிப் பாபக்கிரகமத்தியில் சுபக்கிரகதிருஷ்டியில்லாமல் சுக்கிரன் நின்றாலும் அவ்வாறேயாமென்க.(5)

ஜன்மலக்கினத்தில் செவ்வாயும் 7-ல் சூரியனும் நிற்கில் உதரத்தில் சிசு மரித்துப்போம்; மாதாவும் உயிரிழப்பாள்.

ஜன்மலக்கினத்திற்கு 2-12-ல் பாபக்கிரகங்கள் சுபதிருஷ்டியில்லாமல் பாபதிருஷ்டியுடன் நிற்கிலும் அவ்வாறேயாமென்க. (6)

கலைகளோடு கூடிய சந்திரனாவது சூரியனாவது பாபியோடு கூடி இலக்கினத்தில் இருந்து, 8-ல் செவ்வாய் இருக்கப் பிறந்த பிள்ளையும் தாயும் மரிப்பர்.

சனியினுலும் செவ்வாயினுலும் பார்க்கப்பெற்றுச் சுபதிருஷ்டியில்லாமலிருக்கிற சந்திரன் எந்த ராசியி லிருக்கும்போது மகப்பேறுண்டாயிற்ருே அவ்விராசிக்கு மீளவும் சந்திரன் வரும்போது மாதா மரிப்பாள். (7)

ஜன்மலக்கினத்திற்கு 7-8-9-ம் இடங்களில் பாபக் கிரகங்கள் நிற்கில் பிள்ளையும் தாயும் மரணமடைவர்.

ஜன்மலக்கினத்திற்கு 8-9-12-ம் இடங்களில் பாபர் கள் நின்ருலும் பிள்ளையும் தாயும் மரணமென்றறிக. (8)

ஜன்மலக்கினத்திற்கு 6-12-ம் இடங்களில் பாபர் நிற் கிற் பிள்ளையும் தாயும் மரணமடைவர்.

இலக்கினம், 7, 8 இவைகளில் பாபர் நிற்கில் பிள்ளை யும் தாயும் மரணமடைவரென்க. (9)

சந்திரலக்கினத்திற்கு 7-ல் பாபர் நிற்பின் மாதா மரணம். சந்திரலக்கினத்திற்கு 10-ல் சூரியன் பாப ஞேடு கூடி நிற்கில் மாதாமரணம். சுக்கிரன் இருந்த இராசிக்கு 5-ல் †சூரியன் சனியுடன் இருந்தாலும் மாதா மரணம். சனி பார்த்திருந்தாலும் அப்படித்தான். (10)

சந்திரலக்கினத்திற்கு 5-9-ல் சனி நிற்க இராத்திரி யில் ஜனித்தால் மாதா மரணம். சுக்கிரனுக்கு 5-9-ல் பாபனுடன் செவ்வாய் நிற்க பகலில் ஜனித்தால் மாதா மரணம். செவ்வாய் சனி இவர்களுக்கு மத்தியில் சந்தி ரன் இலக்கினத்தில் நிற்க, 8-ல் சூரியனிருக்க மாதா மரணமென்றறிக. (11)

---

† (அம்சங்களில்.)

சூரியனுக்கு 8-ல் சுபதிருஷ்டியில்லாமல் செவ்வாயும் சனியும் கூடியிருந்தால் பிதாமரணம். பகலில் ஜனித்த ஜாதகனுக்குச் சூரியன் செவ்வாயினாலும் சனியினாலும் பார்க்கப்பெறின் பிதா மரணம். அல்லது இவர்கள் மத்தியில் நிற்கப்பெறினும் பிதா மரணம். (12)

சூரியன் பாபருடன் கூடிச் சரராசியில் நின்றால் விஷம், ஜலம், ஆயுதம் இவற்றுள் ஏதனாலேனும் பிதா மரணமுறுவன்.

சூரியன் செவ்வாய்திருஷ்டியுடன் சரராசியிலிருக்க, பகலிலே ஜனிப்பின் பிதா தேசாந்தரத்திலிருப்பானென்றறிக. (13)

குரூரதிருஷ்டியுடனே சனி சரராசியி லிருக்க, இராத்திரியில் ஜனித்தால் பிதா தேசாந்தரத்திலிருப்பானென்றும், சனியும் செவ்வாயும் சேர்ந்து சரராசியிலிருப்பின் பிதா தேசாந்தரத்தில் மரணமாவானென்றும் அறிக. (14)

எந்தராசியானாலும் சனி, செவ்வாயுடனும் சூரியனுடனும் கூடிநின்றால் ஜனனகாலத்திற்கு முன்பே பிதா மரணமடைவனென்றறிக.

சூரியன் சுபரோடு கூடாமல் செவ்வாய் சனி இவர்களுடன் கூடிநிற்கில் பிதாவும் பாட்டனும் மரணம் என்றறிக. (15)

கிருஷ்ணபக்ஷத்தில் கடகத்திலும், பாபனோடு கூடியிருக்கின்ற புதக்ஷேத்திரமான மிதுனகன்னிகளிலும், சனிசெவ்வாய் க்ஷேத்திரங்களிலும் சூரியனும் சந்திரனும் நிற்க, இவர்களுக்கு 5-9-ல் பாபர் நிற்க, பிதா

வுக்குக் காவலாவது நோயாவது வருமென்றும், கிரகண காலந் தொடங்கி 6 மாசம் இராகுவுக்குப் பலம், இந்தப் பலமுடைய ராகு மேற்கூறிய 5-9-ல் நிற்க இவர்களுக்கு மரணமென்றும் அறிந்துகொள்க. (16)

சமக்கிரகம், மித்துருக்கிரகம், ஏகாதிபத்தியக்கிரகம் இவர்களுடைய இராசிகள் சமராசிகளாம். சத்துருராசிகள், ஷஷ்டாஷ்டம துவாதச ராசிகள் விஷமராசிகளாம். பிதாவுக்குச் சமராசிகளில் ஜனித்தவர்கள் பிதாவுக்கு அநுகூலமாக நடப்பார்கள்; விஷமராசிகளில் ஜனித்தவர்கள் விபரீதமாக நடப்பார்கள். பிதாவினுடைய நக்ஷத்திரத்திலே ஜனித்தவர்கள் புத்திரனானாலும் புத்திரியானாலும் பிதாவுக்கு மிருத்தியுவை உண்டாக்குவரென்றறிக. (17)

மூலம் முதல் 3 பாதங்களிலே ஜனித்த பிள்ளையை த்யஜிக்க வேண்டும்; இல்லையானால், 8 வருஷம் வரையில் பிதா காணலாகாது. இதில் முதற்பாதம் பிதாவும், 2-ம் பாதம் மாதாவும், 3-ம் பாதம் திரவியமும் நாசம். 4-ம் பாதம் ஐஸ்வரியம் உண்டாமென்றறிக. (18)

ஆயிலியம் முதற்பாதந் தவிர மற்ற 3 பாதத்தையும் த்யஜிக்கவேண்டும். இல்லையாகில், 8 வருஷம் புத்திரனைக் காணலாகாது. இதில் 4-ம் பாதம் பிதாவும், 3-ம் பாதம் மாதாவும், 2-ம் பாதம் ஐஸ்வரியமும் நாசம். முதற்பாதம் ஐஸ்வரியமென்றறிக. ($18\frac{1}{2}$)

பூசநக்ஷத்திரத்தில் கர்க்கடலக்கினத்திலும், பூராட நக்ஷத்திரத்தில் தனுலக்கினத்திலும் ஆண் ஜனிக்கின் பிதாவுக்கு மரணம்; பெண் ஜனிக்கின் மாதாவுக்கு மர

ணம். பூசம், பூராடம் இவைகளில் முதற்பாதம் பிதா, 2-ம் பாதம் மாதா, 3-ம் பாதம் ஜாதகன், 4-ம் பாதம் அம்மான் மரணமென்றறிக. (19½)

அஸ்தம் பரணி இவைகளில் 3-ம் பாதத்தில் ஜனிப்பின் மாதாபிதாக்கள் மரணம். பூசம் பூராடம் இவைகளில் முன்னிரண்டு பாதங்களில் ஜனிப்பின் பிதா மரணம். சித்திரை முன்னிரண்டு பாதத்தில் கன்னியாலக்கினத்தில் ஜனிப்பின் மாதா பிதா மரணம். உத்தரம் முதற் பாதம் மாதா மரணம். இப்படி ஜன்மலக்கினத்தி லுதிக்கின்ற நக்ஷத்திரங்களாலும் அரிஷ்டம் வருமென்றறிக. ()

அச்சுவினி மகம் மூலம் இவைகளின் ஆதி 4 நாழிகைகளும், ஆயிலியம் கேட்டை ரேவதி இவைகளின் அந்த 4 நாழிகைகளும் கண்டாந்த மென்றறிக. (21)

பஞ்சமி தசமி அமாவாசை பௌர்ணிமை இவை மூன்றும் பூரண திதி. இவைகளின் அந்தத்தில் 4 நாழிகை கண்டாந்தம். மீனம் விருச்சிகம் கடகம் இவைகளின் அந்திய நவாம்சமும், மேடம் சிங்கம் தனுசு இவைகளின் ஆதி நவாம்சமும் இராசிகண்டாந்தமெனவறிக. (22)

திதிகண்டாந்தம் நக்ஷத்திரகண்டாந்தமானால் மாதா பிதா மரணம். ஜன்மநக்ஷத்திரத்தினாலும் சந்திரலக்கினத்தினாலும் கண்டாந்தம் வந்தால் ஜனித்த சிசு மரணம். எல்லாக்கண்டாந்தமுமானால் சிசுவும் மரித்து, வம்சமும் நாசமாம். சிசு பிழைத்திருந்தால் அநேக அசுவகஜாதிபதியாயிருப்பானென்றறிக. (23)

சூரியன் பிதா. சந்திரன் மாதா. செவ்வாய் பிராதா. புதன் அம்மான். குரு தாயைப்பெற்ற பாட்டன். சுக்கிரன் பிதாவைப்பெற்றபாட்டன். சனி

பிறந்தபிள்ளை என்றறிக. இந்தக் கிரகங்கள் ஜன்மலக்கினத்திற்கு 5-9-ல் நின்றால் அந்தந்தக் காரகன் அவரவகளைக் கொல்லுவனென்றறிக. (24)

இலக்கினத்திற்கு 12-ல் சந்திரன் நிற்கில் மாதா மரணம்; சூரியன் நிற்கில் பிதா மரணம்; செவ்வாய் நிற்கில் பிராதா மரணம்; சனி நிற்கில் சிசு மரணம். ஜன்மலக்கினத்திற்காவது சந்திரலக்கினத்திற்காவது 3-ல் வெகுபாபக்கிரகங்கள் நிற்கில்பிராதா மரணமெனவறிக.()

பகலில் ஜனித்தவனுக்குப் பிதுருகாரகன் சூரியன். இரவில் ஜனித்தவனுக்குப் பிதுருகாரகன் சனி. இந்தப் பிதுர்காரகன் பாபனோடுகூடி நின்றால் †பிதுர்வ்யனுக்கு மரணம். இலக்கினத்திற்கு 6, 7, 8, 10 இந்த ஸ்தானங்களில் பாபக்கிரகங்கள் நிற்கில் அம்மான் மரணமென்றறிக. (26)

இலக்கினத்திற்கு 10-ல் சந்திரனும், 4-ல் ஒரு பாபனும், 7-ல் சுக்கிரனும் இருப்பின் ஜாதகன் தன் வம்சத்தாரை எல்லாம் நாசமாக்குவானென்றறிக. (26½)

முன்சொன்ன அரிஷ்ட யோகங்களிலே எவன் பலவானாய் பாபரோடு கூடியும் பார்த்தும் இருப்பின் அரிஷ்டத்தைப்பண்ணுகிறவனவனே அவன் அந்த ஸ்தானத்தில் வருங்காலமாதல், தன்னுடைய ஸ்வஸ்தானத்தில் வருங்காலமாதல் அவர்களுக்கு மரணமென்றறிக. (27½)

அரிஷ்டகாரகன் சூரியனாயின் ஆறுமாதம்; சந்திரனாயின் 2 நாழிகை; செவ்வாயாயின் ஒருதினம்; புதனா

---

† பிதுர்வ்யன் — பிதாவின் சகோதரன்.

யின் 2 மாதம்; குருவாயின் 1 மாதம்; சுக்கிரனாயின் 1 பக்ஷம்; சனியாயின் 1 வருஷம் எனவறிக. (இக்காலத்திலே மரணந்தருவரெனவுமறிக.) (28)

அரிஷ்டகாரகன் லக்கினமுதல் எத்தனையாம் இராசியில் நிற்கின்றானோ, அந்த லக்கினத்தினாலே சூரியன் முதல் 7 கிரகத்திற்கும் சூரியனாதியாய்ச் சொன்ன காலங்களைப் பெருக்கிக் கண்ட தொகைக்குமேல் மிருத்தியு உண்டாகும். இதல்லாமல் அரிஷ்டகாரகன் லக்கின முதல் எத்தனையாம் ராசியில் நிற்கிறானோ அத்தனை வருஷத்தில், அத்தனை மாசத்தில், அத்தனை நாளில் அவாவர்களுக்கு மரணமெனவுமறிக. (29)

மாதா பிதா அரிஷ்டயோகங்களில் அரிஷ்டகாரகன் எந்தராசியில் நிற்கிறானோ அதற்கு 5-9-ல் பாபர் வருங்காலம் மாதா பிதா மரணம். மாதா அரிஷ்டங்களிலே ஜன்மலக்கினத்திற்கும் சந்திரலக்கினத்திற்கும் 4-9-ல் பாபனோடு கூடிச் சனி வருங்காலம் மாதா பிதா மரணம். இந்த அரிஷ்டயோகங்களிலே அரிஷ்டகாரகன் குரூரனானால் அற்பநாளில் மிருத்தியு. மிருதுவானால் பகுநாள் சென்று மிருத்தியு வென்றறிக. ($30\frac{1}{2}$)

7, 8, 1, 12 இவைகளில் சந்திரன் பாபனோடு கூடி சுபர்பார்வை யில்லாமலிருக்க, கேந்திரங்களிலும் சுபரில்லாமலிருக்க ஜனித்த சிசு உடனே மரணமென்றறிக. ($31\frac{1}{2}$)

சக்கரபூர்வார்த்த—பரார்த்தமாவது:— இலக்கினத்தில் உதயமான பாகத்திற்குச் சரியாய் 4-ம் ராசியின் ஆதிபாகமும், 3-ம் ராசி, 2-ம் ராசி, இலக்கினம், 12-ம் இராசி, 11-ம் இராசிகளும், லக்கினத்தில் உதியாமலிருக்கிற பாகத்துக்குச் சமானமாக 10-ம் ராசியில் அந்தியபாகமும் சக்கரபூர்வார்த்தமாம்.

இலக்கினத்திலுதித்த பாகங்களுக்குச் சமானமாய் 10-ம் ராசியில் ஆதிபாகமும், 9-8-7-6-5-ம் இராசிகளும், இலக்கினத்திலுதியாமலிருக்கிற பாகத்துக்குச் சமானமாக 4-ம் ராசியின் அபரபாகமும் சக்கரபரார்த்தமாம். இந்தச் சக்கர பரார்த்தத்தில் எல்லாப் பாபர்களும் நிற்க, சக்கர பூர்வார்த்தத்தில் எல்லாச் சுபரும் நிற்க, விருச்சிகலக்கினத்தில் ஜனித்த சிசு உடனே மரணம் அடையும். சூரியன் பாதி அஸ்தமனத்திற்கு மேல் நக்ஷத்திரம் காணும் பரியந்தம் சம்க்ஞா நக்ஷத்திரம் சற்றே காணப்படுகிறது. இது ஸாயம்ஸந்தி என்றழைக்கப்பெறும். நக்ஷத்திரம் ஒளி குன்ற ஆரம்பித்தது முதல் சூரியன் பாதி உதயமாகும் வரை உள்ள வேளை பிராதஸ்ஸந்தி என்றழைக்கப்பெறும். இந்த ஸந்தியாகாலத்திலே, சந்திரஹோரையில், எல்லாப் பாபக்கிரகங்களும் ராசிகளுடைய அந்தியநவாம்சங்களில் நிற்கப் பிள்ளைப்பேறுண்டாயின் சிசு உடனே மரணமாகுமென்றறிக. (32½)

நான்கு கேந்திரங்களிலும் பாபர் நிற்க, அவற்றுள் ஒரு கேந்திரத்தில் சந்திரன் நிற்கின் ஜாதகன் உடனே மரணம். 7, 8, லக்கினம், 4 இவைகளில் பாபர்மத்தியத்தில் சந்திரன் பலமில்லாச் சுபர்பார்வையில் நிற்பின் ஜாதகன் உடனே மரணம். (33)

இலக்கினத்தில் க்ஷீணசந்திரன் இருக்க, கேந்திரங்களிலும் அஷ்டமங்களிலும் பாபர்கள் இருப்பாராயின் ஜாதகன் உடனே மரிப்பான். இலக்கினத்தில் ஒரு பாபியும் ஏழில் ஒரு பாபியும் நிற்பதோடு, அவ்வவ்விடங்களிலுள்ளவர்களும் சந்திரனால் பார்க்கப்பெறின் ஜாதகன் உடனே மரணமென்றறிக. (34½)

கேந்திர திரிகோணங்களில் பாபரும், சஷ்டாஷ்டம வியயங்களில் சுபரும், இலக்கினத்தில் சூரியனும் இருப்

பாராயின் ஜாதகன் உடனே மரணமுறுவன். க்ஷீணசந்திரன் 12-லும், இலக்கினம் எட்டாமிடம் இவைகளில் பாபரும், கேந்திரத்தில் சுபர்கள் இல்லாமலுமிருந்தால் ஜாதகன் உடனே மரணமடைவன் என்றறிக. (35½)

இலக்கினத்தில் சந்திரனும், 8-ல் செவ்வாயும், 9-ல் சூரியனும், 12-ல் சனியும் இருந்து, இவர்களைச் சுபர்கள் பாராமலிருந்தால் ஜாதகன் உடனே மரணமடைவன். சந்திரனாவது சூரியனாவது லக்கினத்திலிருந்து, 5-8-9-ம் இடங்களுக்குப் பாபசம்பந்தமேனும் திருஷ்டியேனும் இருந்தால் ஜாதகனுக்கு மரணமென்றறிக. (36½)

அட்டமத்தில் பாபரிருக்க, கேந்திரத்தில் குருவில்லாதிருக்க, சூரியனாவது சனியாவது இலக்கினத்தில் இருப்பின் ஜாதகனுக்கு உடனே மரணம். கேந்திரத்தில் குருவில்லாமலிருக்க, அக்கேந்திரத்தில் சந்திரனாவது செவ்வாயாவது இருந்து, 8-ல் பாபர்கள் இருப்பார்களாயின் ஜாதகனுக்கு உடனே மரணமென்றறிக. (37½)

ஜனனகாலத்தில் திரேக்காண விராசியிலும் சப்தம விராசியிலும் பாபரிருந்து, சந்திரன் லக்கினத்திலிருப்பின் ஜாதகன் உடனே மரணமடைவன். அட்டமத்தில் பல பாபர் கூடிநிற்கில் ஜாதகன் ஒருமாசத்திலேனும் ஏழுநாளிலேனும் மரணமடைவனென்றறிக. (38½)

இலக்கினத்தில் செவவாயும், கேந்திரத்தில் சுக்கிரனும் நிற்கச் சனித்தவன் மீளவும் அந்த லக்கினத்தில் செவ்வாய் வரும்போது மரணமடைவன். சூரியன் செவ்வாய் இவர்களுக்கு நடுவே சந்திரனிருந்தால் மறுபடியும் அந்த ராசியில் சந்திரன் வரும்போது ஜாதகன் மரணமடைவனென்றறிக. (39½)

நரராசிகளான மிதுனம் கன்னி துலாம் கும்பம் இவைகளிலும் இலக்கினத்திலும் சந்திரன் சூரியன் செவ்வாய் சனி இவர்கள் நிற்பினும், அல்லது பார்ப்பினும் அந்தராசியில் சந்திரன் மறுபடியும் வரும்போது ஜாதகன் மரணமடைவன். மேஷமாவது விருச்சிகமாவது இலக்கினமாய், இதற்கு 5-9-ல் குருவும், இந்தக் குருவுக்குக் கேந்திரங்களில் இலக்கினேசனுன செவ்வாயும் நிற்பின் ஜாதகன் உடனே மரணமடைவன் என்க. $(40\frac{1}{2})$

5, 9, 1, 7, 8, 12 இவைகளில் க்ஷீண சந்திரன் சுபர்களோடு கூடாமலும் அவர்களின் பார்வையைப் பெருமலும் பாபர்களோடு கூடிநிற்கில் ஜாதகன் உடனே மரணமடைவன். இலக்கினத்தில் பாபர்களாலே பார்க்கப்பட்ட சனி நிற்கில் 16-ம் நாளில் ஜாதகன் மரிப்பன். சனி பாபர்களோடு கூடிநிற்கில் ஒரு மாதத்திலே மரணமடைவன். பாபர்கள் பாராமலும் சேராமலும் இருப்பின் ஒருவருஷத்திலே மரணமடைவன். $(41\frac{1}{2})$

இலக்கினுதிபதி 6-ல் நின்ருல் அந்தராசி மேஷமாதியாக வரும் அத்தனையாம் வருஷத்தில் ஜாதகன் மரணமடைவன். † தேகாதிபதி 6-ல் நின்ருல் மேஷாதியாக அத்தனையாம் மாசத்தில் ஜாதகன் மரணமடைவன். நவாம்சாதிபதி 6 ல் நின்ருல் அத்தனையாம் நாளில் ஜாதகன் மரணமடைவனென்றறியவேண்டும். $(42\frac{1}{2})$

சூரியோதய முகூர்த்தம் ரௌத்திரம் அதற்கிரண்டாம் முகூர்த்தம் ஸர்ப்பம். இவைகளில் ஜனிக்கும்போது ஆகாயத்தில் முன்பு தூமகேதுவும், பின்பு குறைக்கொள்ளியும், இடியும், பெருங்காற்றுங் காணப்படின் ஜாதகன் உடனே மரணமடைவன்.

---

† தேகாதிபதி — சந்திரனிருந்த வீட்டுக்குடையவன்.

திதியந்தம் நக்ஷத்திராந்தம் இராசியந்தம் அம்ச காந்தம் தினாந்தம் ராத்திரியந்தம் இவைகளில் சிசு ஜனிக்க, சுபதிருஷ்டியில்லாதிருப்பின் ஜாதகன் உடனே மரண மடைவன் என்றறிக. (43)

பாபியோடு கூடிய ராகு க்ஷீணசந்திரனைப் பார்க்கில் ஜாதகனுக்கு அற்பாயுசு. அதிசயமாயிருக்கின்ற ராஜ யோகம் இருப்பின் தாழ்ந்தவம்ச ஜாதகனுக்கும் அரிஷ்டம் வராதென் றறிக.

சுபம்

அரிஷ்ட நவநீதம்

II

மீனலக்கினத்தில் சனியும், 3-ல் சந்திரசூரியர்களும் நிற்கச் சாதகன் வியாதிகண்டு மூன்றுநாளில் மரணமடைவன். அந்த மீனலக்கின ஜாதகனது ஜன்மநக்ஷத்திரத்திற்கு 3-ம் நக்ஷத்திரத்தில் சூரியன் நிற்பின் ஒருநாளில் மரணமடைவன். அந்த மீனலக்கினத்திற்குப் 10-ல் சந்திரனும் சூரியனும் கூடிநிற்பின் ஒருநாளில் மரணமடைவானென்று சொல்க. (45)

சந்திரலக்கினத்திற்கு 7-ல் செவ்வாயும் சூரியனும் கூடிநிற்கில் வியாதிகண்டு 7 நாளில் மரணமடைவன். மேஷமுதல் ஆறு இராசிகள் சௌம்யம். துலாமுதல் ஆறு இராசிகள் அபசௌம்யமாம். இந்தச் சௌமயத்தில் லக்கினத்திற்கு 4-ல் பாபர் நிற்பினும், அபசௌமயத்திற்கு 8-ல் பாபர் நிற்பினும் ஜாதகன் வியாதியோடு பத்து நாளில் மரிப்பன் என்க. (46)

இலக்கினத்திற்கு 5-9 ஆன மேஷாதி 6 இராசிகளுள் சூரியன் நிற்குஞான்று, துலாமுதலாறு இராசிகளில் சந்திரன் நிற்பின் ஜாதகன் 12 நாளில் மரணமடைவன். இலக்கினத்திற்கு 5-9-ல் சந்திரனும் 4-8-ல் சூரியனு மிருப்பின் ஜாதகன் மஹாவியாதியுடனே மூன்றுநாளில் மரணமடைவன். (47)

இலக்கினத்திற்கு 4-ல் சந்திரனும் 6-ல் சூரியனும் இருப்பின் ஜாதகன் 18 நாளில் மரணமுறுவன். சந்திரலக்கினத்திற்கு 5-9-ல் சூரியன் நிற்கில் 20 நாளில் மரணமடைவன் என்றறிக. (48)

சனிசெவ்வாயால் பார்க்கப்பெற்ற லக்கினத்திற்கு 8-ல் சூரியனிருக்கில் மஹாவியாதியுடனே ஜாதகன் மரண

மடைவன். இலக்கினத்திற்கு 8-ஆம் இடமான விருஷபதுலாராசிகளில் 3 பாபர்கள் நிற்கில் ஜாதகன் ஒரு மாசத்தில் மரணமடைவான். (49)

இலக்கினத்தில் கேது நிற்க 2 மாசத்தில் ஜாதகன் மரணமடைவான். மேஷ விருச்சிக மகர கும்பங்கள் பல பாபர்களால் பார்க்கப்பட்டுச் சூரியன் 10-ல் நிற்பின் ஜாதகன் உடனே மரணமாவனென்றறிக. (50)

மேஷம் விருஷபம் கடகம் இவை யொழிந்த இராசிகள் பாபரால் பார்க்கப்பட்டு, க்ஷீணசந்திரன் லக்கினத்தில் நிற்க ஜாதகன் உடனே மரணமடைவன். வக்கிரித்திருக்கின்ற பாபராலே பார்க்கப்பட்டுச் சுபர்களால் பார்க்கப்படாமலிருக்கின்ற சுபக்கிரகங்கள் இலக்கினத்திற்கு ஷஷ்டாஷ்டமங்களிலே நிற்கில் ஜாதகன் மரணமடைவன். (51)

யுத்தத்திலே பாபக்கிரகங்களினுல் ஜயிக்கப்பட்டு லக்கினுதிபதி 7-ல் நிற்க ஜாதகன் ஒருமாசத்தில் மரணமடைவன். (யுத்தமாவது:—குஜாதி பஞ்சக்கிரகங்கள் ஒரு அம்சத்தில் கூடினுன்று ஒன்றுக்கொன்று நிகழும் போராட்டமே. இதில் மேலே நின்ற கிரகம் ஜயிக்கும்.) இலக்கினுதிபதி குரூரனேடு சேர்ந்து 8 மிடத்திலிருந்து சுபர் பாராமலிருப்பின் ஜாதகன் ஒருமாசத்தில் மரணமடைவனென்றறிக. (52)

பல பாபர்களினுல் பார்க்கப்பட்டு லக்கினுதிபதி 8-ஆம் இடத்தில் நிற்கில் ஜாதகன் 4 மாசத்தில் மரணமடைவன். இலக்கினத்திற்கு 2-6-8-12 இவைகளில் பாபக்கிரகங்கள் சுபர்களுடன் கூடாமல் நிற்பின் ஜாதகன் 8 மாசத்தில் மரணமடைவனென்றறிக. (53)

அஷ்டமஸ்தானம் விருஷபதுலாமாகி, அதில் ஒரு பாபி இருந்து, ஒரு பாபனுலே பார்க்கப்பட்டால் ஜாதகன் ஒருவருஷத்தில் மரணமடைவன். (54)

இலக்கினத்திற்கு 6-8-ல் சந்திரனிருக்கில் ஒருவருஷத்தில் மரணமுண்டாகும். பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஒருமாசத்தில் மரணமுண்டாகும். சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் 8 வருஷத்தில் மரணம் உண்டாகும். (55)

சனி வக்கிரிதனாய் 6-8-1-4-7-10-ஆம் இடங்களான மேஷவிருச்சிகங்களிலிருந்து செவ்வாயால் பார்க்கப்பெறின் 2 வருஷத்தில் மரணமுண்டாகும். குரு மேஷவிருச்சிகங்களிலிருந்து, சுக்கிரனுல் பார்க்கப்பெருமல், சந்திரனுலும் பாபராலும் பார்க்கப்பட்டு, அவ்விடம் 8-ஆம் இடமானுல் ஜாதகன் 3 வருஷத்தில் மரணமடைவான். (56)

இலக்கினுதிபதிக்கு 8-ல் க்ஷீணசந்திரனிருந்து, பாபர் பார்வையும் சுபர் பார்வையின்மையுமாயிருப்பின் ஜாதகன் 3 வருஷத்தில் மரணமடைவன். சந்திரன் க்ஷீணனுய்க் கேந்திரத்திலிருந்து, சனிசெவ்வாயாதியரால் பார்க்கப்பெற்றேனும் அல்லது அவர்களோடு கூடியேனும் நிற்கில் ஜாதகன் நான்கு வருஷத்தில் மரணமடைவன். (57)

6-8-12-ஆம் இடமான கடகத்தில் புதன் நின்று சந்திரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் 4 வருஷத்தில் மரணமடைவன். ஜன்மலக்கினுதிபதியும் சந்திரலக்கினுதிபதியும் நவாம்சாதிபதியும் சூரியனோடு கூடிநிற்கில் ஜாதகனுக்கு அற்பாயுள் என்றறிக. (58)

சந்திரலக்கினம் முதல் ஆறு கிரகங்களுக்கும் திருசியபாகங்களாவன:—சந்திரனுக்கு 12. செவ்வாய்க்கு 16. புதனுக்கு 13. குருவுக்கு 11. சுக்கிரனுக்கு 8. சனிக்கு 15 ஆம். இந்தத் திருசியபாகங்களில் பாபரும், அதிருசியபாகங்களில் சுபரும் நிற்க, இலக்கினத்தில் இராகுவும் நிற்கில் ஜாதகன் 5 வருஷத்தில் மரணடைவன் என்றறிக. குரு செவ்வாய் சந்திரன் சனி நிற்கினும், சந்திரன் சனி சூரியன் செவ்வாய் நிற்கினும் 5 வருஷத்தில் மரணமென்றறிக. (59)

சுக்கிரன் சிம்மகடகங்களில் நின்று சுபர்களினால் பார்க்கப்பட்டு, அவ்விடங்கள் லக்கினத்திற்கு 6-8-12 ஆனால் 6 வருஷத்தில் மரணமாம். ஜன்மலக்கினாதிபனும் சந்திரலக்கினாதிபனும் இலக்கினத்திற்கு ஷஷ்டாஷ்டவியயங்களில் சூரியனோடு கூடி அஸ்தமனமாயிருப்பின் எத்துணை சமிக்ஞையாமோ அத்தனையாம் வருடத்தில் ஜாதகன் மரிப்பனென்க. (60)

மகரம் கடகம் விருச்சிகம் இவைகளின் முதல் திரேக்காணம் நிகளம். மீனத்தின் கடைசியும் சிம்மம் கும்பம் இவைகளின் முதல் திரேக்காணமும் கழுகு. மீனத்தின் மத்திய திரேக்காணம் பக்ஷி. மேஷத்தின் முதல் திரேக்காணம் பாசம். ஜன்மலக்கினத்தில் இந்தத் திரேக்காணத்தில் தங்கள்தங்களுடைய இராசிக்கு அதிபதியான கிரகங்களினாலே பார்க்கப்படாமல் பாபக்கிரகங்களோடு கூடிநிற்கில் ஜாதகன் 7 வருஷத்தில் மரணமடைவன். (61)

சூரியன் செவவாய் சனி இவர்கள் இலக்கினத்தில் நிற்க, சத்துருக்ஷேத்திரத்திலாவது சப்தமத்திலாவது க்ஷீணசந்திரன் குருபார்வையின்றி நிற்பின் ஜாதகன்

7 வருஷத்தில் மரணமடைவன். விருஷப மொழிந்த மற்ற ஸ்திரராசிகளில் (சிம்மம் விருச்சிகம் கும்பம்) பாபர்களினாலே பார்க்கப்பட்ட இராகு இலக்கினத்தில் நிற்கில் ஜாதகன் 7 வருஷத்தில் மரணமடைவன். (62)

இலக்கினத்தில் க்ஷீணசந்திரனும், நான்கிலாவது எட்டிலாவது பாபரும் நிற்பின் ஜாதகன் 8 வருஷத்தில் மரணமடைவன். செவ்வாயாவது சந்திரனாவது இலக்கினத்திலும், சூரியன் ஏழிலும் நிற்பின் ஜாதகன் 8 வருஷத்தில் மரணமடைவனென்றறிக. (63)

ஏழில் சூரியன் நிற்கினும், பாபராலே பார்க்கப்பட்டுச் சந்திரன் நிற்கினும் ஜாதகன் 8 வருஷத்தில் மரணமடைவன். இலக்கினம் சிம்மமாகிச் சூரியன் சனியுடன் கூடி 8-ல் நின்று சுக்கிரனால் பார்க்கப்படின் ஜாதகன் 8 வருஷத்தில் மரணமென்றறிக. (64)

ஜன்மகாலத்தில் சனி, சந்திரசூரியர்களோடு கூடி நிற்கில் 9 வருஷத்தில் மரணமாவன். சுக்கிரன் சனி சூரியர்களோடு கூடி, குருவின் திருஷ்டியில்லாமலிருந்தால் ஜாதகன் 9 வருஷத்தில் மரணமென்றறிக. (65)

மிதுனகன்னியில் சந்திரன், செவ்வாய்சூரியர்களினால் பார்க்கப்பட்டு, சுபர் பார்வையின்றி நிற்கில் ஜாதகன் 9 வருஷத்தில் மரணம். இலக்கினாதிபன் பாபனாய்ச் சந்திரநவாம்சத்தில் நிற்பதோடு, சந்திரனுக்குப் 12-ஆம் இடத்தைப் பாபர் பார்க்கில் ஜாதகன் 9 வருஷத்தில் மரணமடைவன். (66)

பாபராலே பார்க்கப்பட்டு இராகு கேந்திரத்தில் நிற்க, ஜாதகனுக்கு 10-ஆவது வருஷத்திலாவது 16-ஆவது வருஷத்திலாவது மரணம் உண்டாகும். சுபர்

பார்வையின்றிச் சந்திரசூரியர்களோடு புதன் கூடிநிற்கில் ஜாதகனுக்கு 11-வது வருஷத்தில் மரணம் ஏற்படும். (67)

இலக்கினத்திற்கு 7-ஆம் இடம் சந்திரசூரியர்களி னுலே பார்க்கப்பட்டு, அதனைச் சுபர் பார்க்காவிடின் ஜாதகன் 12 வருஷத்தில் மரணமடைவன் என்றறிக. ($67\frac{1}{2}$)

ஜனனகாலத்தில் மேஷம் 10. ரிஷபம் 9. மிதுனம் 22. கடகம் 22. சிம்மம் 5. கன்னி 1. துலாம் 23. விருச்சிகம் 23. தனு 18. மகரம் 20 கும்பம் 21. மீனம் 10. இந்தப் பாகங்களில் சந்திரன் பாபர்களோடு கூடி அல்லது பார்க்கப்பட்டு நிற்கில் அந்தந்த எண்களின் வருஷத்தில் ஜாதகன் மரணமடைவன். (69)

இலக்கினம் 3, 4, 5, 7, 9, 11 இதில் குரு நிற்க, 21, 40, 21, 100, 40, 60, 30 இவ் வருஷங்களில் ஜாதகன் மரணமடைவன். (70)

முன் சொன்ன சுதாரிஷ்டயோகங்களில் மேல் சொல்லப்படுகிற † கர்ணரிஷ்ட § நயனரிஷ்டங்களிலும் யாதொரு இராசியில் யாதொரு கிரகம் பலவானாய் நின்று மீண்டும் பாபராலே பார்க்கப்பட்டு அந்த இராசியில் வரும்போது மரணம் சம்பவிக்குமென்ப. கர்ன நயனரிஷ்டமில்லாவிடின் அங்ஙனம் சந்திரலக்கினத்தை அடையும்போது மரணமுண்டாம். அல்லது மேற்சொல்லிய தன்மைவாய்ந்த சந்திரன் கடகராசியில் வரும்போது மரணம் உண்டாம். மரணங்கள் ஒருவருஷத்திற்குள் நிகழுமென்றறிக. (71)

சனியும் செவ்வாயும் ஒரு அம்சத்திலிருப்பின் ஜாதகன் மாதாவினுலே தள்ளப்படுவான். இலக்கினத்தில் சந்திரனும் 7-ல் செவ்வாயுமிருப்பின் ஜாதகன்

† $81\frac{1}{2}$ சுலோகம் பார்க்க. § $76\frac{1}{2}$, $77\frac{1}{2}$ சுலோகம் பார்க்க.

மாதாவினுலே தள்ளப்படுவான். இலக்கினத்திற்கு 2, 11-ல் சனிசெவ்வாய் இருப்பினும் மாதாவினுலே தள்ளப்படுவான். (72)

இலக்கினத்திற்கு 7-ல் சந்திரனும், சனிசெவ்வாய் திரிகோணத்திலு மிருப்பின் ஜாதகன் மாதாவினுலே தள்ளப்படுவான். இந்த யோகத்தில் இலக்கினத்தைக் குரு பார்க்கில் ஜாதகனுக்குத் தீர்க்காயுசு. இலக்கினத்தையும், சந்திரலக்கினத்தையும் சூரியனோடு கூடியிருக்கின்ற சந்திரனையும் குரு பார்க்கில் பரஜாதகனென்க. அங்ஙனம் சூரியனோடும் பாபனோடும் கூடிச் சந்திரன் நிற்கினும் ஜாதகன் பரஜாதகனென்றறிக. ($72\frac{1}{2}$)

இலக்கினத்திற்கு 3, 6, 10, 11 இவைகளில் குரு சூரியன் சந்திரன் கூடி நிற்கில் பரஜாதகன். இலக்கினத்தில் சனி நிற்க, இலக்கினம் சந்திரன் சுக்கிரன் இவர்களைச் சுபர் பாராதிருப்பின் பரஜாதகனென்றறிக. ($74\frac{1}{2}$)

இலக்கினத்திற்கு 12-ல் வக்கிர சனி நிற்கின் வலது கண் போம். செவ்வாய் நிற்கின் இடதுகண் போம். 12-ல் சூரியனும் இலக்கினத்தில் இராகுவுமிருப்பின் அண்டரோகமுண்டாம். ($75\frac{1}{2}$)

இலக்கினத்திற்கு 12-ல் சந்திரனும் சூரியனும் கூடி நிற்கினும், தனியே நிற்கினும் இரண்டு கண்ணும் போம். 6-ல் பாபர் நிற்கின் இடதுகண் போம். 8-ல் நின்றால் வலதுகண் போம். இரண்டிலுமிருந்தால் இரண்டு கண்ணும் போம் ($76\frac{1}{2}$)

இலக்கினத்திற்கு 2-ல் செவ்வாயும், 8-ல் சூரியனும், 6-ல் சந்திரனும், 12-ல் சனியும் நிற்கின் அந்தகனாவான். ஷஷ்டாஷ்டமங்களில் பாபரோடு கூடிச் சந்திரன் நிற்கின் சிலேஷ்ம ரோகங்களால் கண் போகும். ($77\frac{1}{2}$)

இலக்கினத்திற்கு 8-ல் சனியும் சந்திரனும் நின்ருல் சிலேஷ்மரோகங்களால் நேத்திரம் போம். ஜனன காலத்தில் 36 திரேக்காணங்களிலும் தக்ஷிணபாகங்களில் சுபர் நின்ருல் அந்தந்த ஸ்தானங்களில் மறு உண்டென்றும், வாமபாகங்களில் பாபர் நின்ருல் விரணமுண்டென்றும் அறிக. (78½)

இலக்கினமுதல் 12 இராசியில் முதல் திரேக்காணங்கள் சிரசு முதல் 12 ஸ்தானங்களிலும் உதிக்கும். 2-ஆவது திரேக்காணங்கள் கழுத்து முதல் 12 ஸ்தானங்களிலும் உதிக்கும். 3-ஆவது திரேக்காணங்கள் 1, 7, 12-ம் வஸ்தி முதல் 12 ஸ்தானங்களிலும் உதிக்கும். வஸ்தியாவது சிசினத்திற்கு மேல் அரைக்குக் கீழ் உள்ள பாகம்.

இலக்கினத்தில் முதல் திரேக்காணம் சிரசில். 2-ல் முதல் திரேக்காணம் வலதுகண்ணில். 12-ல் முதல் திரேக்காணம் இடதுகண்ணில். 3-ல் முதல் வலக்காதில். 11-ல் முதல் இடக்காதில். 4-ல் முதல் வலதுமூக்கில். 10-ல் முதல் இடதுமூக்கில். 5-ல் முதல் வலது கதுப்பில். 9-ல் முதல் இடதுகதுப்பில். 6-ல் முதல் வலது கன்னப்புறத்தில். 8-ல் முதல் இடதுகன்னப்புறத்தில். 7-ல் முதல் வாயில் உதிக்குமென்றக.

மீளவும், இலக்கினத்தில் 2-ம் திரேக்காணம் கழுத்தில். 2-ல் 2 வலதுதோளில். 12-ல் 2 இடதுதோளில். 3-ல் 2 வலதுகையில். 11-ல் 2 இடதுகையில். 4-ல் 2 வலதுபக்கத்தில். 10-ல் 2 இடதுபக்கத்தில். 5-ல் 2 வலதுமார்பில். 9-ல் 2 இடதுமார்பில். 6-ல் 2 வலது வயிற்றில். 8-ல் 2 இடதுவயிற்றில். 7-ல் 2 வஸ்தியில் உதிக்குமென்றறிக.

மீளவும், 2-ல் 3 சிசினத்தின் வலதுபக்கத்தில். 12-ல் 3 சிசினத்தின் இடதுபக்கத்தில். 3-ல் 3 வலதுகுதத்தில். 11-ல் 3 இடதுகுதத்தில். 5-ல் 3 வலதுதொடையில். 9-ல் 3 இடதுதொடையில். 6-ல் 3 வலதுமுழங்காலில். 8-ல் 3 இடதுமுழங்காலில். 7-ல் 3 வலது முழங்காலுக்குக் கீழில். 1-ல் 3 இடதுமுழங்காலுக்குக் கீழில். 4-ல் 3 வலதுகாலிற்குக் கீழில். 10-ல் 3 இடதுகாலிற்குக் கீழ்ப் பாகத்தில் உதிக்குமென்றறிக. ($79\frac{1}{2}$)

இவைகளின் பலன்:—

முன் சொன்ன சரீரதிரேக்காணங்களில் பாபர் நிற்பின் அந்தப் பாகத்திலே விரணம் வரும். சுபர் நிற்பின் மறு உண்டாகும். இந்தக் கிரகங்கள் ஸ்வக்ஷேத்திரமாய் ஸ்வாம்சமாய் நின்ருலும், ஸ்திரராசி ஸ்திராம்சமாய் நின்ருலும் மறுவென்றறிக. இப்படி ஸ்வக்ஷேத்திராதிபர் நிற்காவிடின் பிறகு வந்ததென்றறிக.

சனிக்கு: கல்லினுலும், வாதத்தினுலும்; செவ்வாய்க்கு: நெருப்பினுலும், கத்தியினுலும், விஷத்தினுலும்; புதனுக்கு: பூமியினுலும்; சூரியனுக்கு: விறகினுலும், நாற்கால் ஜீவஜந்துக்களினுலும்; சந்திரனுக்கு: கொம்புள்ள மிருகங்களினுலும், ஜலத்தினுலும் கேடு வருமென்றறிக. ($80\frac{1}{2}$)

சந்திரன் 3, 11, இலக்கினம் இவைகளில் பாபனேடு கூடிநிற்கில் கர்னத்தைக் கெடுப்பன். பாபர்கள் பார்க்கில் உடனே ஹரிப்பன். ($81\frac{1}{2}$)

இலக்கினத்திற்கு 5-ல் இரண்டு பாபர் நிற்கின் வலது காது கெடும். அது சுபராசியாய்ச் சுபதிருஷ்டி உண்டாயிருப்பின் காது சொஸ்தமாகும். (82)

புத்திரன் ஜனனகாலத்தில், பிராமணருடைய வார்த்தையை உபேக்ஷிக்கப்பண்ணுகையும், லோகம்

இல்லையென்கையும், அபாத்திரத்திலே தானம் பண்ணு கையும், கோபமும், அதிதிக்கு முகங்கொடாமையும் ஆகிய இவைகளெல்லாம் புத்திரனுக்கு நஷ்டமென்றும், குரு கேந்திரத்திலிருந்தாலும் ஜாதகன் மரணமடைவ னென்றும் அறிந்திடுக. (83)

சர்வ கிரகங்களாலும் பார்க்கப்பட்டுச் சந்திரன் விருத்தியாயிருந்தால் சர்வாரிஷ்டத்தையும் போக்கு வான். விருஷபராசியில் 3-ம் பாகையில் சந்திரனிருந்து சுக் கிரனால் பார்க்கப்படின் சர்வாரிஷ்டத்தையும் நீக்குவான்.

சந்திரனுக்கு 6, 7, 8-ல் புதன் பாபரோடு கூடா மல் இருப்பின் சர்வாரிஷ்டத்தையும் நீக்குவான். சுபக் கிரகங்களோடு கூடச் சுபக்கிரக திரேக்காணத்தில் சந்தி ரன் நிற்கினும் சர்வாரிஷ்டத்தையும் நீக்குவான். (85)

சுபக்கிரக துவாதசாம்சத்தில் பூர்ணதி சந்திரன் நிற்கில் சர்வாரிஷ்டத்தையும் நீக்குவான். சுபக்கிரக ராசியில் இலக்கினாதிபதியினாலே பார்க்கப்பட்டுச் சந்தி ரன் நிற்கில் சர்வாரிஷ்டத்தையும் நீக்குவான். பாபக் கிரகங்களுடைய இராசியில் நின்ற இலக்கினாதிபதியை இதர பாபக்கிரகங்கள் பாராமலிருந்தால் சர்வாரிஷ்ட மும் நீங்கும். (86)

மித்திரர்களாயிருக்கின்ற சுபக்கிரகங்களினாலே பார்க்கப்பட்டு இலக்கினாதிபதி எங்கே இருந்தாலும் சந்திரனால் வருகின்ற அரிஷ்டங்கள் எல்லாம் நீங்கும். சர்வ கிரகங்களினாலும் பார்க்கப்பட்டு இலக்கினாதிபதி இலக்கினத்தில் நிற்கினும் சந்திரனால் வருகின்ற எல்லா அரிஷ்டங்களும் நீங்கும். இலக்கினாதிபதி இருக்கும் இராசிக்கு 3, 6, 10, 11-ல் சந்திரன் நிற்கினும் சந்திரனால் வரும் எல்லா அரிஷ்டங்களும் நிவிர்த்தியாகும். (87)

சந்திரலக்கினத்திற்கு 12-ல் சுக்கிரன் நிற்க, 11-ல் பாபக்கிரகங்கள் நிற்க, 10-ல் குரு நிற்கச் சர்வாரிஷ்டமும் போமென்க. இலக்கினத்திற்கு 6, 8-ல் சந்திரன் இருந்து, கிருஷ்ணபக்ஷத்தில் பகலில் ஜனனமாயினும், சுக்கிலபக்ஷத்தில் இராத்திரியில் ஜனனமாயினும் சந்திரனுல் ஏற்படும் தோஷமில்லையென்பது முனிவர்களின் அபிப்பிராயமாம். (88)

உச்சஸ்தானத்திலாவது தன்னுடைய ஷட்வர்க்கத்திலாவது மித்திரவர்க்கத்திலாவது நின்று, பாபக்கிரகங்களினுல் பார்க்கப்படாமல் சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டு, சத்துருக்களினுல் பார்க்கப்படாமல் மித்துருக்களினுல் பார்க்கப்பட்டுச் சந்திரன் பூர்ணனுயிருந்தால் சர்வாரிஷ்டங்களேயும் நீக்குவான். (89)

சந்திரன் பூர்ணனுய்ச் சுபர்களுடனும் மித்திரர்களுடனும் கூடி, சூரியன் செவ்வாய் சனி இவர்களினுல் பார்க்கப்படாமல் கடகத்திலாவது விருஷபத்திலாவது நிற்க, அவ்விடங்கள் இலக்கினத்திற்கு 5-ஆம் இடமானுலும் மாதாவுக்கு நன்மையுண்டாகும். இந்தப் பிரகாரம் சூரியன் நின்றுலும் பிதாவுக்கு நன்மையுண்டாகும். (90)

பகற்காலத்தில் ஜனித்த ஜாதகனுக்கு இலக்கினம் முதல் இரட்டித்த ராசியில் சூரியன் நிற்பின் பிதாவை ஹரிப்பன்; சந்திரன் நிற்பின் மாதுலனே ரக்ஷிப்பன்; சுக்கிரன் நிற்பின் மாதாவை ரக்ஷிப்பன்; சனி நிற்பின் பிதாவின் சகோதரனே ஹரிப்பன்; ஒற்றித்த சரராசியில் சூரியன் நிற்பின் பிதாவை ரக்ஷிப்பன்; சந்திரன் நிற்பின் மாதுலனே ஹரிப்பன்; சுக்கிரன் நிற்பின்

மாதாவை ஹரிப்பன்; சனி நிற்பின் பிதாவின் சகோதரனை ரக்ஷிப்பன்.

இராத்திரிகாலத்தில் ஜனித்த ஜாதகனுக்கு இரட்டித்த சரராசியில் சூரியன் நிற்பின் பிதாவின் சகோதரனை ஹரிப்பன்; சந்திரன் நிற்பின் மாதாவை ரக்ஷிப்பன்; சுக்கிரன் நிற்பின் மாதுலனை ரக்ஷிப்பன்; சனி நிற்பின் பிதாவை ஹரிப்பன்; ஒற்றித்த சரராசியில் சூரியன் நிற்பின் பிதாவின் சகோதரனை ரக்ஷிப்பன்; சந்திரன் நிற்பின் மாதாவை ஹரிப்பன்; சுக்கிரன் நிற்பின் மாதுலனை ஹரிப்பன்; சனி நிற்பின் பிதாவை ரக்ஷிப்பன். (91)

அஸ்தமனமடையாமல் பலவானான குரு இலக்கினத்தில் நிற்பின் சர்வாரிஷ்டத்தையும் போக்குவன். இலக்கினம் சுபக்ஷேத்திரமாய்ப் பலமுடைய சுபர்களாலே பார்க்கப்பட்டுப் பலமில்லாத பாபர்களாலே பார்க்கப்படினும் சர்வாரிஷ்டமும் போமென்றறிக. (92)

சுபவர்க்கங்களிலுள்ள பாவர் சுபவர்க்கங்களிலிருக்கின்ற சுபக்கிரகங்களினாலே பார்க்கப்படின் சர்வாரிஷ்டங்களையும் போக்குவார்கள். ஜன்மலக்கினாதிபதி பலவானாய்ச் சுபர்களினால் பார்க்கப்படின் சந்திரனால் வரும் சர்வாரிஷ்டங்களும் போமென்க. (93)

எந்தக் கிரகமாயினும் பரிவேஷத்தோடு கூடிப் பாபர்களினால் பார்க்கப்படின் சர்வாரிஷ்டத்தையும் போக்குமென்ப. சுபக்கிரகம் ஜயவானாய்ச் சுபர்களினால் பார்க்கப்படின் சர்வாரிஷ்டத்தையும் போக்குவன். (94)

சுபக்கிரகங்களினுல் பார்க்கப்பட்டு 3, 6, 11-ல் இராகு நிற்பின் சர்வாரிஷ்டத்தையும் போக்குவன். அல்லது கடகம் விருஷபம் மேஷம் இந்த ராசிகளிமேல நிற்பினும் சர்வாரிஷ்டத்தையும் போக்குவன். * அகஸ்தியோதயமாவது ‡ சப்தரிஷி உதயமாவது உண்டாயின் சர்வாரிஷ்டமும் போம். (95)

சர்வ கிரகங்களும் ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பின் சர்வாரிஷ்டமும் போம். சுபவரதங்களாயிருக்கின்ற அனபாதியோகங்கள் பகுவாயுண்டாளுல் சர்வாரிஷ்டமும் போம். (96)

சுக்கிரனுவது குருவாவது கேந்திரத்திலிருக்க ஜாதகனுக்கு வயது நூறு. சந்திரனுலே வருகிற அரிஷ்டங்கள் எல்லாம் போம். 8-ல் ஒருவருமில்லாமல், இலக்கினத்தில் பாபருமில்லாமல், கேந்திரத்தில் குரு நிற்பின் ஜாதகனுக்கு வயது 108 என்றறிக. (97)

கேந்திர திரிகோணங்களில் பாபர்களில்லாமல் சுக்கிரனுவது குருவாவது கேந்திரத்திலிருக்க ஜாதகன் சதாயுசு உடையவனுவான். இலக்கினத்தில் சுக்கிரனும் கேந்திரத்தில் குருவும் அஷ்டமத்தில் பாபர்களில்லாமலுமிருக்கின் ஜாதகனுக்கு வயது 120 என்றறிக. (98)

இலக்கினம் கடகமாய் அதில் சந்திரனும் குருவும் இருந்தாலும், அல்லது குருவும் சுக்கிரனும் இருந்து அஷ்டமம் சுத்தியாயிருந்தாலும் ஜாதகனுக்கு அபரிமித ஆயுசு என்றறிக. பாபக்கிரகங்கள் கேந்திரங்களிலும் திரிகோணங்களிலுமில்லாதிருக்க ஜனித்தவன் அபரிமித ஆயுசுடையவனுவான். (99)

---

* மிதுனராசி உதயம். ‡ சிம்மராசி உதயம்.

இலக்கினம் 4, 7, 10 இவற்றுளொன்று கடகமாயிருக்க, இதில் பூர்ணசந்திரனும் குருவுமிருக்க, சுக்கிரன் புதன் இவர்கள் துலாத்திலிருக்க, மற்றக் கிரகங்கள் 3, 6, 11-ல் நிற்க ஜாதகனுக்கு வயது அபரிமிதமென்றறிக. ()

பிராமணர்களுடைய அனுக்கிரகம் அரிஷ்டத்தைப் போக்குமாகையால் அவர்களுக்குக் கோதானம், பூதானம், ஹிரண்ய (சொர்ணம்) தானம், வஸ்திரதானம், தான்யதானம் பண்ணுதல், மந்திரித்த ஜலஸ்நானம், கிருகயக்ஞம், யந்திரங்களாலே ரக்ஷாபந்தனம் பண்ணுதல் ஆகிய இவைகளாலே அரிஷ்டங்கள் ஹதமாமென்று அறிக. (101)

†திக்குபலம், ஸ்தானபலம், காலபலம், சேஷ்டாபலம், நைஸர்க்கிகபலம், திருக்பலம் முதலிய பலங்களால் § அரிஷ்டகாரி பலாதிகனானால் ஜாதகனுக்கு அரிஷ்டமுண்டாமென்றும், மேற்சொன்ன பலங்களால் அரிஷ்டாபவாதகாரி பலமுடையவனானால் அரிஷ்டமில்லையென்றும், இருவரும் சமபலமுடையவராகில் அரிஷ்டமென்றும் இங்ஙனம் பலதாரதம்மியம் அறிந்து பலன் சொல்லவேண்டுமென்க.

அரிஷ்டநவநீதம் சம்பூர்ணம்.

சகலகலாவல்லவன் திருவடி வாழ்க.

சுபம். சுபம். சுபம்.

---

†ஸ்ரீபதி ஜாதககர்மபத்ததி 3-ம் அத்தியாயத்திற் காண்க.

§ ஸ்ரீபதி ஜாதககர்மபத்ததி 6-ம் அத்தியாயத்திற் காண்க.

புத்தக விளம்பரம்

சந்தானதீபிகையுரை

சோதிடசாஸ்திரத்தில் எவருக்கும் இன்றியமையாது அறியவேண்டிய விஷயம் சந்தான பலனேயாகும். இச் சந்தான பலனை விளக்கி வடமொழியில் சந்தான தீபிகை என்னும் நூல் ஆக்கப்பட்டது. ஆனால், அதைத் தமிழ்மக்கள் உணர முடியாமையின், அவர்கள் யாவரும் அறியும்வண்ணம் அச் சந்தான பலனை விளக்கி யாழ்ப்பாணம் அராலியில் 200 வருடங்களுக்கு முன் இருந்த இராமலிங்கமுனிவர் என்பவரால் 122 செய்யுட்கள் கொண்ட தமிழ்ச் சந்தானதீபிகை இயற்றப்பெற்றது. இதில் புத்திரபாவமான ஐந்தாம் பாவபலன் பிரதானமாக விளக்கப்பெற்றிருப்பதுடன், அதற்குச் சார்பாக மற்றைய பதினொருபாவபலனும் சுருக்கி உரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தான உற்பத்தி சம்பந்தமான விஷயங்களும் ஈற்றிலுள்ள சந்தான சரிதை என்பதில் கூறப்பட்டுள்ளன. இதன் முதற் பதிப்பு சில வருடங்களுக்கு முன்னமே செலவாகிவிட்டது. இப்போது இரண்டாம் பதிப்பு பல சீர்திருத்தங்களுடன் நல்ல கிளேஸ் கடிதத்தில் சுத்தமாக அச்சிடப்பெற்றிருக்கிறது. இதன் விலை சதம் 50.

ஸ்ரீபதி அனுபவ ஜாதகம்

சோதிடத்தைப்பற்றி அநேக நூல்கள் இருந்தபோதிலும் அவற்றிற் சொல்லப்பட்டபடி பலன்கள் ஒத்துவருவதில்லையென்று பலர் கூறுவதுண்டு. அவர்கள் சோதிடத்தில் உள்ள சில நுட்பமான விதிகளை அறியாமையினாலேயே அவ்வாறு சரியான பலன்களைக் கூற முடியாதிருக்கின்றார்கள். இப் புத்தகத்தில் மகா தெசையைப்பற்றி அனுபவத்தைக் கொண்டு சில நுட்பமான விதிகள் எழுதப்பட்டுள்ளன. இதைக்கொண்டு மகாதெசாபுத்தி ப[illegible]களை நுட்பமாகச் சொல்லலாம். மேலும் பன்னிரண்[illegible] இலக்கினங்களிற் பிறந்தவர்களது ப[illegible]னகளும் இதில் [illegible]ட்பமா[illegible]கக் கூறப்பட்டிருக்கின்றன. த[illegible]ம் குடும்ப ஜா[illegible]தகங்களைக் [illegible] குறித்துவைத்தற்குக் கிரக [illegible]லைச் சக்கரங்கள் [illegible]அச்சிடப்பட்டி[illegible]ருக்கின்றன. ரூ. 2-00.

சோதிடவிலாச பு[illegible]தகசாலை, கோக[illegible]துவில், யாழ்ப்பாணம்.

பரகிதகணிதம்

ஜாதகபலன்களை நுட்பமாகக் கூறுவதற்குக் கிரகங்கள் நிற்கும் ஸ்தானங்களை ஸ்புடகணித விதிப்படி கணித்தாற்றான் பயன்படும். வாக்கியகணித முறைப்படி கிரகங்களின் ஸ்புடங்களைக் கணிப்பதற்குப் பரகிதமே சிறந்ததாகும். இப்போது வெளியிட்ட மூன்றாம்பதிப்பில், இந்நூலிற் கூறிய ஒவ்வோர் கணிதத்துக்குமுரிய விரிவான உதாரணவிளக்கங்களும், இந்நூலை எத்தேசத்தினரும் உபயோகித்தற்கேற்ற தேசாந்தர சம்ஸ்காரங்களும், ஒவ்வோர் தேசத்துக்கும் பகல்மானம், சூரிய உதய உச்ச அஸ்தமன மணி முதலியவற்றைக் கணிக்கும் விதிகளும் உதாரணங்களும், பகல் அடிக்கு நாழிகை, நிலவு அடிக்கு நாழிகை, நக்ஷத்திர உச்ச நாழிகை, இலக்கினஸ்புடம் முதலியவைகளைப்பற்றிய நுட்பமான விளக்கங்களும், பஞ்சாங்க உறுப்புகளாகிய வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் என்பவற்றின் நியதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அன்றியும், உதயாந்தர மினிற்று, பொதுச் சூரிய உச்சமணி, யாழ்ப்பாணப் பகல்மானம், பலதேச இராசிப்பிரமாணங்கள், தேசாந்தர நியதிகள் முதலான பற்பல விஷயங்கள் அட்டவணைகளாகச் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன.

உயர்ந்த "பெதர்வெயிட் பேப்ப"ரில் 123 பக்கங்கொண்டதாக அச்சிடப்பெற்றது. (முன்பதிப்புகள் 28 பக்கங்களையுடையன.) ஜாதகங் கணிப்போருக்கு இது ஓர் திறவுகோல்போல உதவக்கூடிய நூலாகும்.

இதன் விலை காகிதக்கவ[illegible] ரூபா 1—00.

கலிக்கோ[illegible] பை[illegible]ண்டு ரூபா 1—50.

(தபாற்[illegible]செலவு [illegible]று.)

சோதிடவிலாச புத்தக[illegible]சாலை, கோக்குவில், யாழ்ப்[illegible]ணம்.